திருநெல்வேலி
ஜூன் 16 2018
alarnellai.com
தினமலர்
நெல்லை

# பாளை., சாரதா கல்லூரியில் தனித்திறன் மேம்பாட்டு பயிற்சி

திருநெல்வேலி, ஜூன் 16–

பாளை., சாரதா கல்லூரியில் தனித்திறன் மேம்பாட்டு பயிற்சி நடந்தது.

பாளை., சாரதா மகளிர் கல்லூரியில் உதவி பேராசிரியர்களுக்கான தனித்திறன் மேம்பாட்டு பயிற்சி நடந்தது.

முதல்வர் மலர்விழி வரவேற்றார். கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணப்பவ பிரியா அம்பா ஆசி வழங்கினார். பல்வேறு துறைகளை சேர்ந்த உதவி பேராசிரியர்கள் துறை சார்ந்த உரைகளை காணொலி காட்சி மூலம் விளக்கினர்.

கல்வி ஆலோசகர் சந்திரசேகர் கருத்துரை வழங்கினார். வேதியியல் துறை உதவிப்பேராசிரியை கானசரஸ்வதி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.